# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி

## **E.A**.11/2017 **in E.P**./26/2012

பெயர்: பாலு நாள்: 30.06.2025

எ.மா.சா.1 – மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை.

எ.மா.சா.1 – பாலு - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

குறுக்கு விசாரணை தொடக்க நேரம்.11.50

மனுதாராார்கள் R.E.A.11/2017-ல் என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார்கள். மனுதாரர்கள் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி கோரவில்லை என்றும், மனுச்சொத்தானது அருள்முருகனுக்கு பாத்தியப்பட்டது என்று தீர்மானிக்க வேண்டும் என்று மனு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால், சரியல்ல. இந்த வழக்கு அல்லாமல் நான் O.S.No.217/2008-ல் ஏற்படுத்தப்பட்ட தீர்ப்பை நிறைவேற்ற தான் R.E.P 26/2012 என்ற மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். மேற்படி தீர்ப்பின்படி எதிர்வாதி பாலசுப்ரமணியம் எனக்கு கிரைய பத்திரம் எழுதி பதிவு செய்ய வேண்டும் என மேற்படி மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். R.E.A.11/2017-ல் மனுச்சொத்தானது தங்களுக்கே பாத்தியப்பட்டது என மனுதாரார் உரிமை கோருகிறார்கள் என்றால், சரிதான். பாலசுப்ரமணியம் ஏற்படுத்தியதாக சொல்லப்படும் கிரைய ஒப்பந்த பத்திரம் பதிவு செய்யப்பட்டதா என்றால், பதிவு செய்யப்படாதது. கிரைய ஒப்பந்த பத்திரம் எத்தனை பக்கங்கள் எழுதப்பட்டது என்றால், சரியாக ஞாபகமில்லை. அதில் என்ன சொத்து விவரம் காட்டப்பட்டுள்ளது என்றால், கிழக்கு பக்கம் அருணாச்சலம் நிலம், மேற்கு பக்கம் சிவராமன் நிலம், வடக்கு பக்கம் மகுடஞ்சாவடி முதல் கொங்கணாபுரம் செல்லும் தார்சாலை, தெற்கு பக்கம் பச்சமுத்து நிலம். இதன் சர்வே எண். 252/4A இதில் 39 சென்ட் நிலம் உடைய செக்குபந்தி நிலத்திற்கு தான் கிரைய ஒப்பந்த பத்திரம் எழுதி தரவேண்டும் என நான் தாக்கல் செய்துள்ளேன். நான் செய்த O.S.No.217/2008 வழக்கு பாலசுப்ரமணியம் வழக்கை நடத்தினாரா என்றால், நடத்தினார். வழக்கை நடத்திதான் தீர்ப்பை பெற்றேன் என்றால், சரிதான். பாலசுப்ரமணியம் என்ன எதிர்வாதம் தாக்கல் செய்தாரா என்றால், பதிலுரை தாக்கல் செய்தார், அதில் கிரைய

ஒப்பந்தப்படி மீதி கிரைய தொகை ரூ.40,000/-ஐ பெற்றுக் கொண்டு கிரையம் செய்து தருவதாக ஒப்புக் கொண்டார். பாலசுப்ரமணியனை நீதிமன்றத்தில் சாட்சியாக விசாரித்தார்களா என்றால், சரிதான். என்னிடம் காட்டப்படும் EX.R2 கிரைய ஒப்பந்த பத்திரம் சாதாரண முறையில் எழுதப்பட்ட ஆவணமல்ல என்றும், தயார் செய்யப்பட்ட ஆவணம் என்று வெறுங்கண்ணால் பார்த்தமார்த்திரத்திலே அது தயார் செய்யப்பட்ட ஆவணம் என்று தெரிய வருகிறது என்றால், சரியல்ல. நீதிமன்றத்தில் மீதி கிரையத்தொகை ரூ.40,000/-ஐ பெற்றுக் கொண்டு கிரையம் செய்து தருவதாக ஒப்புக் கொண்ட பாலசுப்ரமணியத்திடம் உடனடியாக மீதி பணத்தை பெற்றுக் கொண்டு கிரையம் செய்து பத்திரம் எழுதுவதற்கு நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால், சரிதான். அவ்வாறு நடவடிக்கை எடுக்காததற்கு காரணம் ஏதேனும் உள்ளதா என்றால், இல்லை. O.S.No.217/2008 வழக்கை எந்த வருடம் தாக்கல் செய்தேன் என்றால், 28.07.2008 தேதியன்று தாக்கல் செய்தேன். அதற்கு முன்பே பாலசுப்ரமணியம் என்பவர் 05.06.2008 தேதியன்று வழக்கு சொத்தை சி.மணிவாசகம் என்பவருக்கு கிரையம் செய்த விபரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியும். பாலசுப்ரமணியம் மணிவாசகத்திற்கு கிரையம் செய்த பிறகு நான் O.S.No.217/2008 வழக்கை தாக்கல் செய்தேனா என்றால், சரிதான். சாட்சி பின்னிட்டு சொல்கிறார், O.S.No.250/2012 வழக்கை தாக்கல் செய்த பின்னிட்டு தான் மணிவாசகத்திற்கு பாலசுப்ரமணியம் கிரையம் செய்த கொடுத்த விபரம் எனக்கு தெரியும். மணிவாசம் கிரையம் பெற்றதற்கு பின்னிட்டு மோசடியாக O.S.No.217/2008 வழக்கை தாக்கல் செய்த விபரம் தெரிந்து O.S.No.49/2009 என்ற வழக்கை விளம்புகை பரிகாரம் கேட்டு எங்கள் மீது தாக்கல் செய்தார் என்றால், அந்த விபரம் எனக்கு தெரியாது, அதன் அழைப்பாணையை எனக்கு கொடுக்கவில்லை. வழக்கு தாக்கல் செய்யும் காலத்திலேயே மணிவாசகம் ஏற்படுத்திய கிரையம் பற்றி எனக்கு தெரியும் என்றும், O.S.No.250/2012 வழக்கிற்கு பின்னிட்டு தான் தெரியும் என்றால், சரியல்ல. O.S.No.49/2009 வழக்கில் அழைப்பாணை சார்வு செய்யப்பட்டுள்ளது என்றும், சார்வு செய்யப்படவில்லை என்றால், சரியல்ல. மணிவாசகம் கிரையத்திற்கு பின்னிட்டு நாங்களும் பாலசுப்ரமணியனும் வஞ்சக கூட்டாக சேர்ந்து கொண்டு முன்தேதியிட்ட ஒரு கிரைய ஒப்பந்த பத்திரத்தை தயார் செய்து கொண்டோம் என்றால், சரியல்ல. அதனால் O.S.No.217/2008 வழக்கை நாங்கள் தாக்கல் செய்ததில் மேற்படி பாலசுப்ரமணியம் ஆஜராகி மேற்படி வழக்கை ஒப்புக் கொண்டதாக கூறி ஒரு

மோசடியான தீர்ப்பை பெற்றுக் கொண்டேன் என்றால், சரியல்ல. நீதிமன்ற நடவடிக்கைகளை தவறாக பயன்படுத்திக் கொண்டோம் என்றால், சரியல்ல. தீர்ப்பை பெற்ற பின்னிட்டு பாலசுப்ரமணியம் மீதி கிரையத் தொகை ரூ.40,000/-ஐ பெற்றுக் கொண்டு கிரையம் செய்து கொடுத்து தருமாறு வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பினேனா என்றால், அனுப்பவில்லை, ஆனால் மீதி தொகையை நீதிமன்றத்தில் டெபாசிட் செய்துவிட்டேன். டெபாசிட் செய்வதற்கு முன்பு பாலசுப்ரமணியத்திடம் ஒப்புக் கொண்ட படி மீதி கிரைய தொகையை பெற்றுக் கொண்டு கிரைய பத்திரம் எழுதி தரவேண்டும், இல்லையெனில் மீதி கிரைய பணத்தை டெபாசிட் செய்துவிடுவோம் என்று அறிவிப்பு அனுப்பவில்லை என்றால், சரிதான். தீர்ப்புப்படி மீதி கிரையத் தொகையை பாலசுப்ரமணியம் நேரடியாக கொடுத்து கிரையம் செய்து கொள்வது நல்லதா அல்லது மீதி கிரையத் தொகையை தீர்ப்புப்படி நீதிமன்றத்தில் வைப்பீடு செய்து நீதிமன்றத்தின் மூலமே கிரையம் செய்து கொள்வது நல்லதா என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. பாலசுப்ரமணியம் என்னிடம் ஏற்படுத்திக் கொண்ட கிரைய ஒப்பந்தம் உண்மையாக இருந்திருந்தால் தீர்ப்புப்படி மீதி கிரையத் தொகையை பெற்றுக் கொண்டு பாலசுப்ரமணியம் கிரையம் செய்துகொடுத்திருப்பார் என்றும், மோசடியான கிரைய ஒப்பந்தம் என்பதால் தான் அவர் கிரைய பத்திரம் எழுதி கொடுக்க முன்வராமல் நீதிமன்ற நடவடிக்கை மூலம் நாங்கள் கிரையம் வாங்கி கொள்ளலாம் என நிறைவேற்று மனு தாக்கல் செய்தோம் என்றால், சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்த நிறைவேற்று மனுவில் பாலசுப்ரமணியம் என்ன எதிர்வாதம் செய்து என்ன எதிருரை தாக்கல் செய்துள்ளார் என்றால், எதிர்வாதமும் செய்யவில்லை, எதிருரையும் தாக்கல் செய்யவில்லை. பாலசுப்ரமணியம் 21.08.2013 தேதியன்று சமூக நீதிமன்றத்தில் எதிருரை தாக்கல் செய்துள்ளார் என்றால், எனக்கு தெரியாது. எதிருரையில் பாலசுப்ரமணியம் மணிவாசகத்திற்கு கிரையம் செய்தது உண்மை என்றும் பின்னிட்டு பச்சமுத்துவிற்கு கிரையம் செய்துவிட்டார் என்றும் மேற்படி பச்சமுத்துவும் அருள்முருகனுக்கு தான செட்டில் மெண்ட் எழுதி விட்டார் என்றும், மேற்படி கிரைய சொத்தானது அருள்முருகன் சுவாதீனத்தில் உள்ளது என்று சொல்லிய விபரம் தெரியுமா என்றால், எனக்கு தெரியாது. மீதி தொகை ரூ.40,000/-ஐ நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட்டது என்ன ஆனது என்றால், பாலசுப்ரமணியம் நீதிமன்றத்திலிருந்து மனு தாக்கல் செய்து பெற்றுக் கொண்டார். அந்த தொகை எப்பொழுது பெற்றுக் கொண்டார் என்றால், தீர்ப்பு பெற்ற பின்பு 2008-ல் செக் மனு தாக்கல் செய்து 2009-ல் பெற்றுக்

கொண்டார். என்னிடம் காட்டப்படும் EX.A8 செக் மனு பாலசுப்ரமணியம் தாக்கல் செய்த மனு, அபிடவிட் மற்றும் மனு மீதான உத்தரவின் சான்றிட்ட நகல் என்றால், சரிதான். மேற்படி செக் மனுவை பாலசுப்ரமணியம் தாக்கல் செய்த போது தீர்ப்புப்படி கிரையம் பத்திரம் எழுதி பதிவு செய்வதற்கு பின்னிட்டு தான் மீதி கிரையத் தொகை ரூ.40,000/-ஐ சமூக நீதிமன்றத்தில் பெற்றுக் கொள்ள வேண்டும் என நான் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை என்றால், சரிதான். மேலும் கிரைய பத்திரம் எழுதி பதிவு செய்வதற்கு பின்னிட்டு தான் மீதி கிரைய தொகையை பாலசுப்ரமணியம் பெற்றுக் கொள்ள வேண்டும் என எனக்கு ஆட்சேபனை செய்ய தோன்றவில்லை என்றால், சரிதான். மேற்படி மீதி கிரையத் தொகை பாலசுப்ரமணியம் பெற்றுக் கொள்ள நான் ஆட்சேபனை ஏதும் இல்லையென தெரிவித்தோமா என்றால், இல்லை. எங்களுடைய வழக்கறிஞர் யார் என்றால், திரு. R.சேகர் அவர்கள். செக் மனுவில் திரு. R.சேகர் அவர்கள் மீதி தொகை ரூ.40,000/-ஐ பெற்றுக் கொள்வதில் ஆட்சேபனை இல்லை என மேற்குறிப்பு எழுதியிருக்கிறார் என்ற விவரம் தெரியுமா என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது, ஆனால் மீதி கிரையத் தொகை ரூ.40,000/- ஐ பெற்றுக் கொண்ட விபரம் 2008-லேயே எனக்கு தெரியும். பாலசுப்ரமணியம் தாக்கல் செய்த செக் மனுவை தாக்கல் செய்த வழக்கறிஞர் யார் என்றால், எனக்கு தெரியாது. I.A.120/2008 செக் மனுவானது என்னுடைய வழக்கறிஞர் R.சேகர் பெயர் மற்றும் முகவரி உள்ள டாக்கெட் சீட்டில் மேற்படி அவரது பெயர் மற்றும் முகவரியையும் whitner மூலம் அடித்துவிட்டு நாங்கள் நியமித்த வழக்கறிஞர் மூலம் மேற்படி செக்மனுவை தாக்கல் செய்து அதில் நாங்கள் நியமித்த வழக்கறிஞர் R.சேகர் ஆட்சேபணை இல்லை என்று கூறி ரூ.40,000/-ஐ அந்த வழக்கறிஞரின் பேரில் சமூக நீதிமன்றம் கொடுத்துள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால், அது பொய்யாகும். பொதுவாக ஒரு வழக்கறிஞர் காசோலை மனு தாக்கல் செய்தால் எதிர்தரப்பு வழக்கறிஞர் அலுவலகம் சென்று அவர் முகவரி அடங்கிய டாக்கெட் சீட்டை பெற்று முகவரியை அடித்து அதில் அவருடைய பெயரை பேனாவால் எழுதி காசோலை மனு தாக்கல் செய்யமாட்டார் என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி மோசடியாக காசோலை மனு தாக்கல் செய்து பெற்றுக் கொண்ட விபரத்தை சமூக நீதிமன்றத்திற்கு நிரூபிக்க சமூக நீதிமன்ற ஆவண காப்பகத்தில் உள்ள O.S.No.217/2008 என்ற வழக்கு கோப்பு முழுவதையும் சமூக நீதிமன்றத்திற்கு தாக்கல் செய்தால் அதன் உண்மைத்தன்மை தெரிந்துவிடும் என R.E.A.87/2017 என்ற மனுவை மனுதாரர்கள்

தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியும். மேற்படி மனு விசாரணையில் தகுதியின் அடிப்படையில் தள்ளுபடி செய்யப்பட்டது. மேற்படி காசோலை மனு நடவடிக்கைகள் மோசடியானது என நீதிமன்றத்திற்கு தெரிந்துவிடும் என்பதால் தான் அதன் அசல் ஆவணங்கள் நீதிமன்றத்திற்கு வருவதை கடுமையாக ஆட்சேபனை செய்தோம் என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. தற்போதாவது மேற்படி உண்மைத்தன்மையை சமூக நீதிமன்றத்தில் தெரிந்து கொள்ள அசல் ஆவணங்களை தெரிவிக்க ஆட்சேபனை உள்ளது என்றால், காலதாமதமாகும். இருப்பினும் நீதிமன்றமே அனுமானம் செய்து கொள்வதற்கு மேற்படி அசல் ஆவணங்களை சட்டப்படி பார்வையிட ஆட்சேபனை ஏதேனும் உள்ளதா என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் EX.P8 செக் மனுவில் பெயர் அடித்து திருத்தம் செய்யப்பட்டதை காட்டி சாட்சியிடம் கேட்டபோது அதை பார்க்க மறுத்து அதுபற்றி எனக்கு தெரியாது என்று சொல்லிவிட்டார். மீதி கிரையத்தொகையை சமூக நீதிமன்றத்தில் வைப்பீடு செய்வது போல் செய்து நாங்களே வேறு வழக்கறிஞரை நியமித்து மோசடியாக மீதித்தொகையை பெற்றுக் கொண்டோம் என்றால், சரியல்ல. O.S.No.49/2009 வழக்கை மணிவாகம் தாக்கல் செய்து அதில் தீர்ப்பு பெற்றுக் கொண்டார் என்றால், O.S.No.250/2012 வழக்கை தாக்கல் செய்த பிறகு தான் அதுபற்றி எனக்கு தெரியும். O.S.No.49/2009 வழக்கில் மணிவாசகம் கோரியவாறு வழக்கு சொத்தானது மணிவாசகத்திற்கே உரிமையானது என்று தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பிக்கப்பட்டது என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. O.S.No.250/2012 வழக்கிற்கு பின்னிட்டாவது நாங்கள் O.S.No.49/2009 பாலசுப்ரமணியம் மணிவாசகத்திற்கு ஏற்படுத்தி கொடுத்த கிரையமும் பின்னிட்டு மணிவாசகம் பச்சமுத்துவிற்கு ஏற்படுத்தி கொடுத்த கிரையமும், பின்னிட்டு பச்சமுத்து அருள்முருகனுக்கு ஏற்படுத்திய தான செட்டில் மெண்ட் பத்திரமும் செல்லாது என எந்தவித விளம்புகை பரிகாரமும் கோரி வழக்கு தாக்கல் செய்தேனா என்றால், இல்லை. பாலசுப்ரமணியம் மணிவாசகத்திற்கு ஏற்படுத்திய கிரையத்திற்கு பின்னிட்டு நாங்கள் மோசடியாக முன்தேதியிட்டு தயார் செய்து கொண்டு O.S.No.217/2008 என்ற வழக்கை தாக்கல் செய்து அதில் மோசடியாக தீர்ப்பும், தீர்ப்பாணையும் பெற்றுக் கொண்டு பின்னிட்டு மீதி கிரையத்தொகை ரூ.40,000/-யும் நீதிமன்றத்தின் மூலம் மோசடியாக பெற்றுக் கொண்டோம் என்றால், சரியல்ல. சாதாரணமாக ஒருவர் கிரைய பத்திரம் எழுதி கொடுத்து விட்டு தான் மீதி கிரையத் தொகை பெற்றுக் கொள்ள வேண்டும்

என்பது பொதுவான நடைமுறை என்றால், சரிதான். ஆனால் நாங்கள் மோசடியாக நீதிமன்றத்தின் மூலம் கிரையம் செய்வதற்காக இந்த மனுவை தாக்கல் செய்தேன் என்றால், சரியல்ல. மனுதாரர்கள் தாக்கல் செய்த நிறைவேற்று மனு R.E.A.11/2017 அனுமதிக்கதக்கது என்றும் நாங்கள் தாக்கல் செய்த நிறைவேற்று மனு எண். 26/2012 நிலைக்கதக்கதல்ல என்றும், தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால், சரியல்ல. மனுதாரர் கோரிக்கை படி தீர்ப்பு பிறப்பிக்கப்பட வேண்டும் என்றால், சரியல்ல. O.S.No.49/2009 ஏற்படுத்தப்பட்ட தீர்ப்பின் படி மணிவாசகம் வழக்கு சொத்திற்கு உரிமையானவர் என்றும், அதன்படி மணிவாகம் பச்சமுத்துவிற்கு ஏற்படுத்திய கிரையமும், பச்சமுத்து அருள்முருகனுக்கு ஏற்படுத்திய தானசெட்டில் மெண்ட் சட்டப்படி செல்லும் என்றால், சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிந்த நேரம் .12:30

ஒப்பம்:- பாலு

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.